ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2480/11 - 2026 මාර්තු මස 17 වැනි අඟහරුවාදා - 2026.03.17

2480/11 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: பிய 3/1/3/02/2017-(ii).

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அதிகாரிபற்று பியகம பிரதேச செயலாளர் பிரிவில் சியம்பலாபே கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட சுவட்டு வரைபட இலக்கம் 512439 இல் வலய இலக்கம் 02 இல் பத்திர இலக்கம் 01 மற்றும் 2026.02.17 ஆந் திகதிய நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.3035 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய (ஏ. 0, றூட் 3, பர். 0) காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: தெல்கஹவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 50 - 60 வயதுடைய தென்னை மரங்கள் 20, சுமார் 25 - 30 வயதுடைய பலா மரங்கள் 09, சுமார் 10 - 15 வயதுடைய பலா மரங்கள் 11, சுமார் 10 - 15 வயதுடைய ஈரப்பலா மரம் 01, சுமார் 10 - 15 வயதுடைய மா மரம் 01 மற்றும் சுமார் 25 - 30 வயதுடைய காட்டு ஈரப்பலா மரம் 01 என்பன காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.3035 ஹெக்டயார் (ஏ. 0, றூட் 3, பர். 0).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பியகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்தன உடவத்த,
பிரதேச செயலாளர்,
பியகம.

பிரதேச செயலகம்,
பியகம,
சபுகஸ்கந்த, மாகொல,
2026, மாச்சு 16.

EOG 03 - 0155

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.